# இந்துசாதனம்

DUPLICATE

## THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| பத்திரக் கிரயம். | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஊ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. 9-40 |
| தொலைவாய்ப்பகுதி: ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

| விளம்பர விகிதம். | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | காற்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு ஷ விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஞூ கார்த்திகைமீ உருஉ (1923 டிசெம்பர் 10) திங்கட்கிழமை. { இலக்கம்—௪௪.


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றுள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

## ஸ்ரான்டேர்ட் கொளுக்கியோடுகள்.

**(Standard Tiles.)**

இவை வேரேக் என்னுமிடத்திலுள்ள ஸ்ரான்டேர்ட் ஓட்டுக் கம்பனியாராற் செய்யப்படுவன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டின் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையுங் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விஷயத்திலும், ஏனையஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம். (H. 18.)

---

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

### ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

### புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4-0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

**பிரமேக நிவாரணி.**

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

**ரசமணி.**

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென மேலும் பெருகும். தொத்து நோய், அவமிருத்து தோஷம், மேகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், கேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
(Q. 40) பழனி. S. I.

---

உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

## மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்த விர்த்தி, இந்திரியக் கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

### மூலத்திற்கு குருநாக பஸ்பம்

ஆப்ரேஷன் அவசியமில்லை; மூளை தானே கரையும்; சீழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாத முள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### இருமலுக்கு குருதாளக பஸ்பம்.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, சபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

**பிரமேக நிவாரணி.**

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நிற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

**மாந்திரீக சத்து.**

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தன லாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மேடல்கள் பெற்ற
C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மேடிக்கல் ஹால்,
(H. 19). பழனி. S. I.

---

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

புஷ்டிக்கு கைகண்ட

### ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோனபலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரு. 10. 50 பில்ஸ் ரு. 4-0-0
20 பில்ஸ் ரு. 2. வி. பி. சார்ஜ் வேறு.

**பிரமேக நிவாரணி.**

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரு. 2

**பிளேக் மாத்திரை.**

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரு 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரு. 1.

T. R, கருப்பண பிள்ளை,
(Q. 41.) வைத்தியசாலை, பழனி. S. I.

---

காசிநாடா சேலை.

16 முழ நீளம்; $2\frac{1}{2}$ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

வெள்ளிக்கெண்டைச்சால்வை.

$5\frac{1}{2}$ முழ நீளம்; $2\frac{1}{2}$ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் நைஸ் நூலினால் செய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பேனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

---

தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரம் நீராந்திகள். நீளம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
(H. 16) தொண்டமானாறு.

---

**பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.**

---

ஓர் பிராமணோத்தமர் தேவை.

சிலங்கூர் இலங்கைத் தமிழர்சங்கத்தாரால் நடத்தப்படும் கோலாலம்பூர் 'ஸ்கொற்' வீதியிலிருக்கும் கந்தசுவாமி கோயிலுக்கு ஓர் பூசகர் வேண்டும். அவர் கந்தபுராணம், பெரியபுராணம், இராமாயணம், திருவிளையாடல் முதலான நூல்களுக்கு நன்குயர்த்தம்பண்ணக்கூடியவராயும், இலக்கணம் படித்தவராயும், சம்ஸ்கிருதத்தில் போதிய அறிவுடையவராயும், உலகம் மதித்த வித்துவான்களினுடைய முறைமையான மாணவராயும், பரம்பரையான பிராமண குடும்பத்தைச்சேர்ந்தவராயு மிருக்கவேண்டும். அத்துடன் உற்சவாரம்ப(துவஜாரோகண)த்துக்கும், இரதோற்சவம் முதலியனவற்றிற்கும் உரியவராயிருக்கவேண்டியது. அவர் மிக மதிப்பாய் நடத்தப்படுவார். விபரங்களைக் காரியதரிசியிடம் அறிந்துகொள்ளுக.

சி. கந்தையா,
ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
(Q. 45.) காரியதரிசி.

---

அகம் வந்தன! சிறந்த தினுசு! — கவனியுங்கள் — மகிழ் தந்தன! குறைந்த விலை!

## கிறீஸ்மஸ், பொங்கல்

### நெருங்கிய பண்டிகைகள் வந்துவிட்டன!

### தங்களை மகிழ்விப்பதும், அலங்கரிப்பதும்

## மனோரம்மிய நற் ஜவுளிகள்

விவரங்களுக்கு விரைந்தெழுதுக!

**இனும்!** தமிழ் கேட்லாக் **இனும்!**

### உயர்ந்த சரக்குகளாய்க் குறைந்த விலைக்கு அனுப்பித் தருவோம் மறந்திடாதீர்கள்.

ராமராய் அண்டு கோ., மதுரை,
(தென் இந்தியா.)

(Mis. 412).

---

கனவான்களே! உடனே ஆர்டர் அனுப்புங்கள்!!

விலைசரசம்! உடைநயம்!! அருமையான தினுசு!!!

## சேலம் ஜவுளி தினுசுகள்.

எங்கள் கம்பெனியில் சேலத்தில்தயாராகும் சகல விதமான தினுசுகளிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு விசேஷமாக பிடித்தமுள்ள தினுசுகளிலும், ஜோடி, துப்பட்டா, துயிலிமாதிரி அங்கவஸ்திரங்கள், பச்சாணுக்களும், நயம் 120 நெ. 100 நெ. 80 நெ. நூலில் பலகலர் பட்டினாலும் வெள்ளி ஜரிகையினாலும் கரைகளுடையதும் பலவிதமான பேட்டுகள் வைத்து அற்புதமான வேலைப்பாடுடையதும் பட்டினாலும் ஜரிகையினாலும் பலவிதமான முந்திகள்போட்டதும் முந்தியில்சிட்டை போட்டதாகவும் கிடைக்கும். உடல் நயம் வெண்பட்டில் ஜரிகைப்பேட்டுஜோடி, துப்பட்டாக்களும், பலகலர்பட்டு முடிலேஞ்சிகளும், பலகலர்பட்டுகளில் அருகுமுந்தியில் ஜரிகையினால் பலவித உருவங்களமைத்து உடலில் ஜரிகைக் கொட்டடி போட்ட லேஞ்சிகளும் தயாராகிறது.

குறிப்பு:—எல்லா தினுசுகளும் நம்ம சொந்தத் தறிகளில் தயாராவதால் நெசவு அழுத்தமாகவும் கோட்டமுள்ளதாகவும் அருமையான தினுசுகளாகவும் கிடைக்கும். விலை சகாயமாக எல்லா ஆர்டர்களுக்கும் வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. தினுசு பிடித்தமில்லாவிடில் திருப்பியனுப்பி வேறு தினுசு பெற்றுக்கொள்ளலாம்.

தந்திவிலாசம்,
ஜவுளி சேலம்,
Javuli Salem.
} கா. கோ. அ. வெ. கு. ஒபுளிசெட்டியார் & Co.,
ஜவுளிவியாபாரம் கொகை சேலம்.

(Q. 44)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோற்காரி ௵ கார்த்திகை ௴ 25௳ திங்கட்கிழமை.

## இங்குள்ள அங்கியநாட்டு மதுக்கடைகளை அறவே யொழித்தல் வேண்டும். ங.

அங்கியநாட்டு மதுபானங்கள் இங்கு வந்த வரலாற்றையும் அவை நம்மவருட் பலரை நாசமாக்கிய பரிதாபத்தையும் முன்னர்க் கூறியுள்ளேம். இந்த அங்கிய நாட்டு மதுபானங்களை எங்ஙனம் நமது தேசத்தில் இல்லாதொழிப்பதென்பதைப் பற்றி இயன்றவரையிற் கூறுதும்.

தலைவரிப்பணங் கொடுப்போருள் நூற்றுக்கு அறுபதுவிகிதமானோர்க்குக் குறையாத தொகையினர், வருகிற ஜனவரி ௴ ௧௯-ந்௳ இதற்கென நியமிக்கப்படும் இடங்களிற் சென்று அங்கிய நாட்டு மதுக்கடைகள் வேண்டாம் என்று தங்கள் சம்மதத்தைத் தெரிவிப்பரேல், யாழ்ப்பாணத்துள்ள அம்மதுபானக் கடைகளெல்லாம் அகற்றப்படுமென நமது அரசாங்கத்தார் விளம்பரஞ் செய்திருக்கின்றனர். ஆதலினாலே "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டு"மென்ற பிரகாரம் இந்த அரிய சமையத்தை நாங்கள் தவறவிடவொண்ணாது. ஆனால், அங்கிய நாட்டு மதுக்கடைகளை நீக்குதல், இங்கிருந்த கள் சாராயத் தவறணைகளை அகற்றியது போன்ற அத்துணைச் சுலபமான காரியமென்று எவரும் எண்ணிக்கொள்ளவொண்ணாது. ஏறக்குறைய எண்ணாயிரம் பேர்வரையிற் சம்மதஞ் சொன்னாலே யாழ்ப்பாணத்துள்ள அங்கியநாட்டு மதுக்கடைகள் அத்தனையும் அகற்றப்படுதல் முடியும் இங்ஙனமிருத்தலால், இப்பொழுதே இதன்பொருட்டுச் செய்ய வேண்டிய முயற்சிகள் இன்னின்னவென்பதனை அபிமானிகளெல்லோருஞ் சிந்தித்து ஐக்கியப்பட்டு நிரைப்படுத்திச் செய்தல் வேண்டும். எழுபத்தைந்து எண்பது வருடங்கட்கு முந்தி இங்கே வந்து நம்மை முற்றிக்கையிட்டிருக்கும் இந்த அங்கிய நாட்டு மதுபானமாகிய சத்துருவைச் சிலர்மாத்திரஞ் சேர்ந்து எதிர்த்துப் பொருது புறங்காணுவதென்றால் இலகுவான கருமமன்று. பல்லாயிரம் பேர் சேர்ந்து இடையுறா ஊக்கத்தோடு சிரமம் பொருட்செலவு என்னு மிவைகளைப் பொருட்படுத்தாது உழைத்தாலன்றி இக்கருமத்திலே அனுகூலமுறுதல் முடியாது.

அங்கிய மதுபானங்களை விலக்குவதற்குச் சம்மதஞ் சொல்லும் உரிமைபூண்டுள்ளவர்கள் வசிக்கும் இடங்கள் தோறும், ஊக்கமும் அபிமானமுமுள்ள வாலிபரையும் பெரியோரையுந் தனவந்தரையுங் கொண்ட மதுவிலக்குச் சங்கங்கள் கூட்டப்படல்வேண்டும். இடங்கடோறுங் கூடும் இச்சங்கங்கள் ஒன்றோடொன்று தொடர்புடையனவாயிருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட பெருங் கருமங்களைச் செய்து நிறைவேற்றுதற்குப் பணமே இன்றியமையாததாதலினால், செல்வர் வறியவர் என்னும் பேதமின்றி எவரும் தங்கள் தங்களாலியன்ற பண உதவியை இச்சங்கங்களுக்குச் செய்தல் வேண்டும். சங்கத்தார், இடங்கடோறுஞ் சென்று இந்த அங்கிய நாட்டு மதுபானத்தினால் நமது நாட்டிற்கு விளைந்திருக்கும் பரிதாபமான நிலைமையை எடுத்துப் போதித்தல்வேண்டும். இவ்விஷயமாகத் துண்டுப் பத்திரிகைகள் அச்சிட்டுக் காலந்தோறும் வெளியிடுதல்வேண்டும். இங்குள்ள ஆங்கில இந்துசாதனம், இலங்காபிமானி (The Ceylon Patriot), உதயதாரகை, சத்தியவேத பாதுகாவலன், சன்மார்க்க போதினி, சுதேசநாட்டியம் என்னும் பத்திரிகைகள், குறித்த ஜனவரி மாதம் ௧௯ந் திகதிவரையில், இந்த அங்கிய நாட்டு மதுக்கடைகளை விலக்கும் விஷயமாக ஒவ்வொரு பிரசாத்திலும் ஒவ்வோர் விஷயத்தை வெளியிட்டுவருதல் வேண்டும். சனத்தலைவர் தேசாபிமானிகள் நியாயதுரந்தரர்கள் ஆசிரியர்கள் செல்வஞ் செல்வாக்குடையோர் ஏனையோர் ஆகிய எல்லோரும் இந்த விஷயமாகவே உழைத்தல்வேண்டும். எஞ்சியிருக்கும் இந்து வாலிப சங்கத்தார், மிஷனரிமார், போதகர்கள், உபதேசிமார், போதனைமாதரென்னு மிவர்களும் இந்தக் கருமம் நிறைவேறும் வரையில் தங்கள் சமய போதனைகளை விடுத்து இந்த மதுவிலக்குப் போதனையையே செய்தல்வேண்டும். புதிய சட்ட நிரூபண சபைக்குப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படுதற்கு முற்பட்டு நிற்கும் அபிமானிகள், அக்கருமமாக ஓடித் திரிதலை, குறித்த ஜனவரி மாதம் ௧௯-ந் திகதி வரைக்கும் ஒழித்து, தங்கள் அபிமானத்தையும், தேசகைங்கரியஞ் செய்யவேண்டுமெனக் கொண்ட அபேட்சையையும், செல்வஞ் செல்வாக்கென்னு மிவைகளையும், வாக்கு வல்லபத்தையும், மற்றுந் திறமைகளையும் இந்த மதுபான விலக்கு விஷயத்திற் காட்டி இதனை அனுகூலமுறச் செய்தல்வேண்டும். அங்ஙனஞ் செய்வரேல் அவர்களுடைய தெரிதல் விஷயத்தில் ஊரவர்கள் தாமே சென்று மனப்பூர்வமாக அவர்களுக்குத் துணைசெய்வர்.

யாம் இதுகாறும் கூறிய முயற்சிகளனைத்தையுஞ் செய்துவரின், இந்த அங்கிய நாட்டு மதுக்கடைகள் நிர்மூலமாகப் போகுமென்பது திண்ணமாகும். அங்ஙனம் இவை நாசமாகப் போகுமானால், நமதுநாடு ஈடேறும்; பஞ்சம் பசி கலகம் தீயவொழுக்கம் பொய் வியாச்சியம் முதலிய தீமைகளெல்லாங் குடிபோய்விடும். நாம் மனாரம்மியத்தோடு வாழுதல்முடியும். நிற்க,

மாரிக்காலத்திலே அட்டை புறப்பட்டாற்போல, தப்பிடத்தில் அழுக்கையும் ஆபாசங்களையும் பொதிந்தனவாய், இங்குள்ள அங்கியநாட்டு மதுபான வியாபாரிமார் சிலராலும், அம்மதுபான அபிமானிகளாலும் வெளியிடப்பட்ட துண்டுப் பத்திரிகைகள் சில புறப்பட்டிருக்கின்றன. அட்டையைத் தடிகொண் டடிப்பார் உலகத்தில் ஆருமில்லை. அட்டையைக் கண்டு அருவருப்பார்களேயன்றி எவரும் அதற்கு அஞ்சமாட்டார். அதனை ஒரு தடிகொண்டு தீண்டவே அது சுருண்டு செயலற்று வாளா கிடக்கும். அதுபோலவே அபிமானிகள் இத்துண்டுப் பத்திரங்களைப் பொருட்படுத்தவொண்ணாது; இவைகளுக்குப் பதிலெழுதவொண்ணாது; இவைகள் கூறும் வெள்வெருட்டுக்கு அஞ்சவொண்ணாது; இவைகளைக் கண்டால் அருவருத்து ஒதுக்கவேண்டும்; இவைகள் எப்படிப்பட்ட நோக்கங் கொண்டவர்களால் எழுதப்பட்டன வென்பது பலரறிந்த இரகசியமாகும். "தாய்க்கொலை சால்புடைத்தென்பாருமுண்டு" என்றபடி குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்புகள் எங்கும் இடையிடையே யுண்டென்பதை யாம் பலமுறையுங் கூறியுள்ளேம். ஊரெல்லாம் ஒன்றாய்க் கூடி ஒத்து ஓடும்போது, அவற்றோடு மாறுபட்ட, தொகையில் அற்பராகிய இவர்கள்பிரயத்தனம், கன்மலையைக் கல்ல முயன்ற சிறு கோல் போற் பயன்படாதொழியும். மாரிக்காலமிருக்கும் வரையில் அட்டைகள் பின்னரும் பின்னருந் தோன்றித் தோன்றி வருவதுபோல, இம்மதுபானக் கடைகள் இருக்கும் வரையிற்றான் இந்த அழுக்கு நிறைந்த ஆபாசம் பொதிந்த துண்டுப் பத்திரங்களும் புறப்படும். அவை இல்லாதொழிய இவையு மில்லா தொழியுமாம்.

## நித்திய கருமம்.

(யாழ்ப்பாணம் சைவப்பிரசாரகர் ஸ்ரீ த. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் எழுதியது.)

நித்தியகருமமென்பது சைவசமயிகளாயுள்ளோர் சமயப்பிரவேசஞ் செய்யப்பெற்ற நாள் முதல் தினந்தோறும் ஆவசியகம் செய்துவரவேண்டிய கடமையாகும். இது மனம், வாக்கு, காயமென்னும் மூன்றினாலும் செய்யப் பெறுவதாம். மனம் பாவிக்கும்; வாக்கு மந்திரஞ் செபிக்கும்; காயம் கிரியையைச் செய்யும். மனம் ஒரு வழி நிற்க, வாக்குப் பிறிதோர் வழி நிற்க, காயம் மற்றொருவழி நிற்க எவ்வித செயலைச் செய்தாலும் அச்செயலின் பயனை அடைய முடியாது. இந்த மூன்று கரணங்களையும் ஒருவழிப்படுத்தி நற்செயல்களைச் செய்து தெய்வ வழிபாட்டில் நிறுத்துவோமானால் "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொரு" ளாகிய சிவபரம்பொருள் அச்செயலை ஏற்றுப் பலன் அருளும். "மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல, இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச், சினமுதலகற்றி வாழுஞ்செயலறமானால் யார்க்கு, முனமொரு தெய்வ மெங்குஞ் செயற்குமுன் னிலையாமன்றே" என்னும் வாக்கின் பொருளை மனத்திற் கொள்ளுதல்வேண்டும். நாம் இருந்து வசிக்கின்ற வீட்டைப் பெருக்கி மெழுகி அழுக்குகளைத் திரட்டி ஒரு புறத்து ஒதுக்கிச் சுத்தமாய் வைத்திருந்து வாழுதல் போலவே எங்கள் தேகமாகிய வீட்டையும் மந்திரம், கிரியை, பாவனை என்னும் மூவகைக் கருமங்களாலும் சுத்தப்படுத்தி வாழுதற்பொருட்டே நித்திய கருமமென்பது ஆவசியகமென நூல்கள் கூறுகின்றன. ஒரு தினத்திற் சுத்தப்படுத்தினும் பின்னரும் அழுக்கு வந்து வீடுகளிற் கூடுதல்போல, இத்தேகமாகிய வீட்டிலும் பிரபஞ்ச மயக்காலாகும் அழுக்கு கணந்தோறும் வந்து கூடும். எந்த அழுக்குள்ள இடத்தில் யார் இருந்து பயில்கின்றாரோ அந்த அழுக்கு அவர்மேற் பொருந்தியிருக்கக் காண்கின்றோம். அங்ஙனமே இத்தேகமாகிய வீட்டிலும் அழுக்கு வந்து அதிகமாகக் கூடியிருக்குமாயின், ஆன்மாக்களாகிய எங்கள்மேல் அவ்வழுக்குகள் பொருந்தப்பெறும். பொருந்தவே இழிமையாகிய எண்ணம் தொழில் நடை என்பன நிகழும். ஆதலின் அவ்வழுக்குகளை நித்தியகருமச் செயலால் திரட்டி ஒதுக்கிச் சுட்டெரித்துவிட்டால் தூய்மையுடையரா யிருந்து வாழலாம் என்பதாம். நிரீக்ஷணம் என்னும் பார்வை முதலிய முத்திரைகளாலும் ஒவ்வொரு தத்துவங்களையும் சுத்திசெய்வதாகிய ஆசமனத்தாலும் சிவமாந்தன்மை எய்துதற்கடையாளமாகிய நியாசத்தாலும் மூக்காண ஒற்றுமை நெறியால் முதல்வனருள்கொண்டு மும்மல நீக்கமும் சிவப்பிரகாசமும் பெறுதற் கடையாளமாகிய திரிபுண்டரத்தாலும் இன்னும் இவைபோன்ற பல செயல்களினாலும் அழுக்குகளைத் திரட்டி ஒன்றாக்கி மூக்கின்வழியாக வெளியே வந்ததாகப் பாவித்துப் பெருவிரல் நுனியில் சுவாலிக்கும் அக்கினியில் விட்டுச் சுட்டெரிக்கும் செயலினாலும் இனிது புலப்படும். நாத சொரூபியாகிய சிவத்தின் மணம் எங்கணும் பரிமளிக்கும்பொருட்டுச் செய்வதாகிய மந்திர செபம் சகல கன்மங்களையும் அகற்றும். நாதவழியால் இயங்கப்பெறுகின்ற அணுக்களும் அணுக்களின் கூட்டமாகிய ஒலியும் ஒலியின் காரியமாகிய அக்கரங்களும் அக்கரங்களின் காரியமாகிய சொல்லும் மந்திரமாயிருக்குமாயில், சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்கின்ற வேறுபாட்டை மூலாதாரத்தினின்று எழுந்து அவ்வத் தானங்களிற் படிந்து அடைகின்ற முறையால் அவ்வவ்விடங்களிலெல்லாம் அந்த மந்திர மணமே மலிந்திருக்கும். ஆதலினால் தத்துவங்கள் யாவற்றினும் இந்த மந்திர மணம் வீசவே சிவமணம் தானே பரிமளிக்கும். அவ்வாறு பரிமளிக்குங்கால் தத்துவங்கள் தூய்மையுடையனவாயிருக்கும். தத்துவ சகிதனாகிய ஆன்மாவும் தூய்மையுடையதாய் மேலான எண்ணமும் மேலான செயலும் மேலான நடையும் உடையதாய் இகபர மிரண்டினும் இன்பத்தை யடையும். இவ்வித உண்மைகளெல்லா மிருக்கவும் இவற்றைச் சிறிதும் உற்றுணராது சிவதீக்கை பெற்ற அன்றே தக்கிணையோடு கொடுத்துவிடுபவர் சிலர், ஒருவாறு தப்பி வந்தால் வீட்டிலே வைததவிடத்தில் மறந்துவிடுபவர் சிலர், சிறிய முயற்சிக்கே நேரமில்லை நித்தியகருமஞ் செய்வதெப்படி எனப் பிதற்றுவோர் சிலர், குழந்தைக்குக் கொஞ்ச வயசு ஆதலால் இப்போது குறிவைக்கக் கூடாது என்று தடுத்துவிடுவோர் சிலர், இவ்விதம் உண்மைக்கு வேறாகிய உணர்ச்சியுடையர்களாய், எங்கள் பிள்ளைகள் நல்லவர்களாய்க் காணவில்லையேயென்று கவலைப்படுகின்றனர். நினைப்பது செய்வது நடப்பது ஆதியவற்றுக்குக் காரணமாகிய மன முதலிய கருவி கரணங்களைத் தூய்மைப் படுத்துதற்கு ஏதுவாகிய நித்திய கருமத்தைச் சிரத்தையோடு அநுட்டித்து வந்தால் யாவரும் சுத்தமுடையவர்களாயும் நல்லவர்களாயுங் காணப்படுவர். உள்ளே மனஞ் சரியாய் இருந்தாற் போதும் இந்த வெளிப் பூச்சிலென்ன இருக்கிறதென்று பிதற்றுவோருஞ் சிலர் உளர். உள்ளே ஒரு நோய்வந்தால் வெளியிலே பூச்சுப்பூசினவுடன் உள்ளிருக்கும் நோய் தணிவதை யாவரும் கண்முன் காணலாம். உள்ளே இருக்கின்ற பசியை வெளியே இருக்கின்றஉணவு வெளியிலுள்ள வாயின் வழியாகச் சென்று தணிப்பதை யாவருமறிவர். இவற்றையுணர்ந்து சைவசமயிகளாகிய நம்மவர்களெல்லோரும் சமய அபிமான முடையவர்களாய்ச் சாத்திர உண்மைகளைச் சிந்தித்து, தவறாது நித்தியகருமத்தைத் தங்கள் செய்கடன் என்று உறுதிப்பட்ட மனமுடையவர்களாய் அநுட்டித்துவரவேண்டும்.

## அரசடி விநாயகராலயம்.

வண்ணார்பண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள்கோவிலுக்குச் சமீபமாகத் தெருவோரத்தில் விளங்கும் இவ்வாலயம் மிகப் புராதனமானதாகும். இதன் பழைய கட்டிடம் பெரிதும் இலமுற்றிருந்தமையைக் கண்ட, கொழும்பு பிரபல ஆங்கிலவைத்தியராகிய (டக்டர்) E. V. இரத்தினமவர்கள், தமது அன்னையார் கேள்விப்படி பெருந்தொகைப் பொருள் செலவிட்டு, பழையஆலயத்தை முற்றாகத் தவிர்த்து வெண்கல்லுத் திருப்பணியாக இத்திருப்பணியை முற்றுவித்தனர். யாழ்ப்பாணத்திற் பிரபலவர்த்தகராகவுள்ள ஸ்ரீ வே. மு. வேலாயுதபிள்ளையவர்களின் மேற்பார்வையில் இத்திருப்பணி விரைவாகவும் அழகாகவும் நிறைவேறி மேற்படி ஆலயத்திற் சென்ற ஆவணி ௴ நிகழ்ந்த சுபமுகூர்த்தத்திற் சமபுரோட்சணகும்பாபிடேகமுஞ் செய்யப்பட்டது. நெடுங்காலமாமாக இவ்வாலயத்தின் அர்ச்சகராக விருந்த பிரமஸ்ரீ. கார்த்திகேயக் குருக்கள் ஆதிநாராயணஐயர் இற்றைக்கு மூன்றுவருடங்களுக்கு முன்னர் தேகவியோகமாகிவிட்டமையினால் அவரது மனைவியாரே பூசையுரிமையைப் பெற்று ஆள் வைத்து இருகாலப்பூசை நடப்பித்து வரலாயினர். கும்பாபிஷேகமாயும் மூன்று மாசங்களாக இருகாலப் பூசையே நடைபெற்றுவந்தது. நிகழும் கார்த்திகைமாசந்தொடக்கம் பகல் இருகாலமும் இரவு இருகாலமுமாக நான்குகாலப் பூசைநடைபெற்று வருகின்றன. இவ்வாலயத்தின் கருமங்களை நிர்வகித்து நடத்தும்படி பஞ்சகர்த்தாக்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்; இப்பஞ்சகர்த்தாக்களுடை முயற்சியாலும் மற்றுந் தரும சீலர்களின் புண்ணியத்தாலும், நாள்தோறும் நான்குகாலப்பூசை கிரமமாக நடந்து வருவதுமாத்திரமன்றி வசந்தமண்டபம் மடைப்பள்ளி களஞ்சியம் என்னும் இவைகளின் திருப்பணியும் நடைபெற்றுவருகின்றது. எழுந்தருளும் மூர்த்தியும் புதிதாக அமைக்கப்பட்டுச் சென்ற ஐப்பசிமாதத்தில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் பிரதிஷ்டை செய்யப்பெற்றது. புதியனவாகப்பல ஆலயங்களை அமைத்தலைக்காட்டிலும் புராதன ஆலயமொன்றைப் புதுக்குவித்து நித்திய நைமித்திகங்கள் கிரமமாக நடைபெறச் செய்தல் பன்மடங்கு புண்ணியமெனச் சாஸ்திரங்கள் கூறும். ஆதலினாலே பஞ்சகர்த்தாக்களும் மற்றும் புண்ணிய சீலர்களும் ஆரம்ப சூரத்துவமாகவிராமல் தங்கள் பொறுப்பை நன்குணர்ந்து இப்புராதன ஆலயத்தின் நித்தியநைமித்திகங்கள் யாதும் இடையூறின்றிக் கிரமமாக எப்பொழுதும் நடைபெறச்செய்து அடியார்க்கு நேரும் விக்கினங்களைத் தவிர்க்கும் விநாயகப் பெருமானது திருவருளைப்பெற்று அழியாப் புகழோடும் புண்ணியத்தோடும் இனிது வாழ்வார்களாக.

## சமாசாரம்.

காலநிலை:—சென்ற சனிக்கிழமை தொடக்கம் நன்மழை வருஷித்துவருகின்றது. இந்நன்மழை வாடிய நெற்பயிருக்குப் பொன்மழை யெனத்தக்கதாம்.

**சரசாலை வீரமாகாளி அம்மன் கோவில்:**—சரசாலையில் பழைய கட்டடமாயும் சைவரின் வணக்கத்துக்குரிய ஸ்தலங்களி லொன்றாகவும், முன்னொருகாலத்தில் யாழ்ப்பாணத்தை முற்றிக்கையிட்ட ஒல்லாந்தர் சைவ ஆலயங்களை அழித்து நாசப்படுத்தியபோது அவர்களால் சேதமுறாது நிலைத்திருந்ததுமாகிய இத்திருக்கோயில் காலங்கழிந்தமையினால் கட்டிடம் இப்பொழுது பழுதடைந்து தானே இடிந்து விழக்கூடிய நிலையிலிருக்கிறது. இதை முற்றாயிடித்துப் புதுக்குவிக்கவேண்டியது அவசியமென்றும், அப்படிச் செய்வதற்கு பதினாயிரம் ரூபா வேண்டுமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு அங்குள்ள சில சைவப் பிரபுக்களும் சிவபக்தர்களும் தலையிட்டிருக்கிறார்கள். இவர்களில் ஸ்ரீ எம். எஸ். பொன்னுச்சாமி, ஸ்ரீ எம். எஸ். கணபதிப்பிள்ளை என்னுமிருவரின் பரோபகாரமூலமாக 1923-ம் ஆ௳ கார்த்திகை ௴ 19௳ சரசாலையிலும் மற்றும் அயற் கிராமங்களிலுமின்று வந்து கூடிய பெருங் கூட்டத்தார் சமுகமாக அத்திவாரம் இடப்பட்டது. உண்மையான சிவநேயச்செல்வர்களும் சைவசமயாபிமானிகளுமாயுள்ளவர்கள் இதற்குத் தேவையான காலங்களில் இயன்ற பணஉதவி செய்து எங்களுடைய பெருமுயற்சியை நிறைவேற்றி நீடூழி வாழ்வாராக.

சடித.

**வதிரித் தேவரையாழிச்சைவவித்தியாசாலை:**- இவ்வித்தியாசாலையை அரசினர் பதிவுசெய்த நாலாம்வருடப் பரீட்சை இந்த ருதிரோற்காரி௵ ஐப்பசி ௴ 30௳ (15-11-23) நடைபெற்றது. சென்ற இருவருடப் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு உபகாரமளித்த மேற்படிபாடசாலைச்சபையாராகிய கொழும்பு வியாபாரிகள் ஐ. ஆறுமுகமும் வெ. வல்லிக்குட்டியும், குருநாக்கல் வியாபாரி சி. க. ஆறுமுகமும், இரத்தினபுரி வியாபாரி க. வ. கந்தையாவும், ஆகிய இவர்களுடன் இச்சபையைச் சேர்ந்த சகோதரர் மாத்துறை வியாபாரி நா. சின்னத்தம்பியும், நீர்கொழும்புவியாபாரி வே. இராமலிங்கமும் ஆகிய இவர்கள் இவ்வருடஞ் சித்தியடைந்த பிள்ளைகளுக்குப் பரிசளிப்பதாகப் பாடசாலை ஆசிரியருக்கும் பிள்ளைகளுக்கும் 26-2-23 ல் எழுதிய லிகிதத்தின்படி நிகழும் ருதிரோற்காரி௵ மார்கழிமாதத்திற்குள்ளாக மேற்படி பாடசாலையில் பரிசளிப்புக் கூட்டத்தை வெகுசிறப்பாக நடைபெறச்செய்வார்கள்.

சடித.

மதுரைத் தமிழ்ச் சங்கம்:—இச்சங்க மனேஜராகிய ஸ்ரீ லெஷ்மிநாராயணையரவர்கள் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:—1924ஞு மார்ச்சு மீ 8உயில் இம்மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் வழக்கம்போல் நடத்தப்பெறும் ஆங்கில கலாசாலை மாணவர்களுக்காக ஏற்படுத்தியுள்ள மெற்றிக் யப் எ. பீ. ஏ. ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷைக்கு 1924ஞு ஜனவரி மீ 22உக்குள்ளும் 1924ஞு ஏபரல் மீ 7, 8, 9ம் தேதிகளில் நடத்தப்பெறும். தனித்தமிழ்ப்பரீக்ஷைக்கு ருத்ரோத்காரிஞு தைமீ 20உ (2-2-24) க்குள்ளும் டி தமிழ்ச்சங்கப்பரீக்ஷைக்கு வரும்மாணவர்கள் விண்ணப்பபாரங்களையும் பரீக்ஷைக் கட்டணத் தொகையையும் இச்சங்கமாபீசு மானேஜருக்கு அனுப்பவேண்டுமென்றும் மேலே குறிப்பிட்ட தேதிகளுக்குப்பின்பு வரலாகும் யாவும் அங்கீகரிக்கப்படமாட்டாவென்றும் இதன் மூலம் அறிவிக்கலாயிற்று. பீ ஏ. சீனியர் வகுப்பு மாணவர்கட்கு யூனிவர்சிடியாரால் வைக்கப்பட்ட Group VI-தமிழ்ப்பாடங்களும், ஸ்கூல் பைனல் வகுப்பு மாணவர்கட்கு C Group-க்கு ஏற்பட்ட A and C Group தமிழ்ப்பாடங்களும், இண்டர்மீடியேட் வகுப்பு மாணவர்கட்கு யூனிவர்சிடியாரால் இண்டர்மீடியேட் வகுப்புக்கு வைக்கப்பட்டுள்ள தமிழ்ப்பாடங்களும் சங்கப் பரீக்ஷைகட்கு வைக்கப் பட்டுள்ள தமிழ்ப்பாடங்களாகும். அரை அணு ஸ்டேம்ப் அனுப்பினால் விண்ணப்ப பாரம் இவ்வாபீசினின்றும் பெறலாம்,

**புதிதாகச் செய்யப்பட்ட பெரிய யுத்தக் கப்பல்:**—அமெரிக்கா அரசாங்கத்தாரால் புதிதாகச் செய்யப்பட்ட ஒரு பெரிய யுத்தக்கப்பல் வருகிற முதல் தேதியன்று தண்ணீரில் விடப்படும். அதில் எட்டு 16 அங்குல பீரங்கிகளும் பதினொன்கு 5 அங்குல பீரங்கிகளும் நான்கு 3 அங்குல பீரங்கிகளும் தண்ணிருக்குள் சென்று கப்பலைத் துளைக்கும் கருவியை விடும் பீரங்கிகள் இரண்டும் இருக்கின்றன.

**அறுபத்திரண்டு பேரன் பேத்திமார்கள்:**—ரிச்சார்ட்டன் என்னும் நகரில் வசிக்கும் மிஸ்டர் ஜேம்ஸ் என்பாருக்கும் அவருடைய மனைவியாருக்கும் இப்போது 68-வது வயசு நடந்து வருகிறது. அவர்களுக்கு 62-பேரன் பேத்திமார்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய 11 பிள்ளைகளில் இரண்டு புத்திரர்களுக்கும் இரண்டு புத்திரிகளுக்கும் விவாகம் நடந்திருக்கிறது. அந்தப் புத்திரர்களில் ஒருவருக்குச் 17 குழந்தைகளும் மற்றொருவருக்குப் 10 குழந்தைகளும் புத்திரிகளில் ஒருவருக்கு இருபது குழந்தைகளும் இருக்கின்றன. பேரன் பேத்திமார்களுக்கு இருபத்து மூன்று குழந்தைகளும் இருக்கின்றன.

**அமேரிக்க மதுவிலக்கு:**—வால்ஸ்டெல் மதுவிலக்குச் சட்டப்படி கடற்கரையிலிருந்து 12 மைலுக்குள் எவரும் மதுச்சரக்குடன் கப்பலைக் கொண்டுவரக்கூடாது. இப்போது பிரிட்டனும் அமெரிக்காவும் செய்துகொண்ட உடன்படிக்கையில் ஒருவித ராஜிக்கு வந்திருக்கிறார்கள். பிரிட்டன் தேசத்தைப்பற்றியவரையில் மூன்று மைல் எல்லையை அமெரிக்கா ஒப்புக் கொள்கிறது. மேலும் அமெக்காவுக்குள் இறக்குமதி செய்யாதவரையில் சரக்குகளுடன் பிரிட்டிஷ் கப்பல்கள் அமெரிக்கத் துறைமுகங்களுக்குள் செல்லலாம். இந்த ஒப்பந்தத்தால் மேலே சொல்லிய சட்டப்படி ஸ்தலஸ்தல அதிகாரிகள் தடுக்கப்படார்களென்று பிரிட்டன் அமெரிக்காவைக் கேட்டிருக்கிறது. இதற்கு அமெரிக்க அரசாங்கத்தார் "உயர்தர நீதிமன்றத்தில் இந்த ஒப்பந்தத்திற்கு இடையூறு ஏற்படாது" என்று பதில் அனுப்பியிருப்பதாக 'மான்செஸ்டர் கார்டியன்' பத்திரிகை கூறுகிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தப் பதிலைப்பற்றி யோசனை செய்கிறார்கள்.

### விவாகம்.

திரிகோணமலையிற் பிரபல வைத்தியராகவிருந்த ஸ்ரீமத் ஏரம்பையரவர்களின் கனிஷ்ட புத்திரனும், ஸ்ரீ பஞ்சாட்சர வைத்தியரவர்களது சகோதரனுமாகிய ஸ்ரீ விஸ்வலிங்கமவர்கட்கும் திரிகோணசலேஸ்வரப்பெருமானது ஆதீன பூஜைகாரன் ஸ்ரீ சண்முகத்துக்குருக்களவர்களுடைய கனிஷ்ட புத்திரியும் ஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்களவர்களுடைய சகோதரியுமான ஸ்ரீமதி சரஸ்வதியம்மாளுக்கும் நிகழும் ருத்ரோத்காரிஞு கார்த்திகைமீ 18உ திங்கட்கிழமை இரவு கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில் விவாகம் வெகு சிறப்பாய் நிகழ்ந்தது. இத் தம்பதிகள் நீடூழிவாழச் சுப்பிரமணியப் பெருமான் கிருபை பாலிப்பாராக. சுடித.

## கடிதம்.

### ஸ்ரீமதாறுமுகநாவல குருபூஜாதின மகோபந்நியாசம்.

நாளது கார்த்திகைமீ 15உ சந்திரவாரம் மகநட்சத்திரம் எங்கள் தெய்வத் தமிழ்மொழியும், சைவத்திருநெறியும், இல்லைத் தலைமையும் தழைக்குமாறு கிருபாவசத்தால் வந்தவதரித்தருளிய ஸ்ரீமதாறுமுகநாவல சற்குருநாத ஸ்வாமிகள் தமது அநவரத ஆன்மார்த்த பூஜ்யர் அழகு சிற்றம்பலமுடையாரது ஸ்ரீமத் குஞ்சித சரண தியானந்த லீலா விபூதியைக் கைக்கொண்டருளிய குருபூஜாதின மாதலால் அன்றிரவு 7 மணிக்குமேல் சிதம்பரம் உமாபதி வீதி ஸ்ரீமதாறுமுகநாவல சந்தானம் உமாபதி விலாசத்தில்

ஸ்ரீமதம்பலவ நாவல ஸ்வாமிகளால்
"அவதாரம்"

என்னும் விஷயமாக உரையாசிரியர் ஸ்ரீமத் ம. க. வேற்பிள்ளையவர்கள் கேட்டுக்கொண்டபடி உபந்நியாசஞ் செய்யப்பெற்றது.

உபந்நியாசத்தில் அவதாரங்கள் கற்பகற்பங்களாகத் தேவர்களாலும் ஆசாரியர்களாலும் எத்தனையோகோடிகள் எமது பரதகண்டத்தில் நிகழ்ந்துவரும் வரிசைக்கிரமத்தில் இந்நாள் பாஷைகளும், மதங்களும், ஆரியமும் புதியனபுதியனவாய் வந்து ஒன்றோடொன்று விரவிக் காறலை தெரியாது ஜீவர்கள் அலமாநின்ற இக்காடார்ந்தகாரவேலையில் இத்தமிழ்நாட்டில் எங்களுக்கென்று வந்து எமக்கு வழிகாட்டிக் கைகொடுத்தருளிய அருளவதாரம் எமது நைட்டிக சிவாச்சிரம ஞான பராக்கிரம ஸ்ரீமதாறுமுகநாவல சற்குருநாத ஸ்வாமிகளது அவதாரமென்பது சுருதி, யுக்தி, அனுபவங்களின் வைத்து நாவலஸ்வாமிகளால் நிருபிக்கப்பட்டது.

ஸ்ரீமதாறுமுகநாவல சந்தான சாஸ்திர பரிசோதகர் பிர்ம்மஸ்ரீ ஸ்ரீராமசாஸ்திரிகள் நாவலர்கலாசாலை அபிவிருத்திபின்பொருட்டு மங்களாசாசன சுலோகஞ் செய்து அதன் பொருளை விரித்துரைத்தார்கள்.

பிர்ம்மஸ்ரீ குப்புசாமி தீக்ஷிதரவர்கள் சமயகுரவர் நால்வர் சந்தான குரவர் நால்வரது அருட்கலைதான் "நாலவ" ரென்னும் பதமே "நாவல" ரென வர்ண விபர்யய ஸ்வரஸம் படைத்து நாவலரென்னும் பிரசித்த நாமம் எத்திசையும் பரக்கத் தனது தவவலியால் முளைகொண்டெழுந்து உலகம் களிமகிழ்ந்துண்ணக் கனிரஸ பலம்பழுத்ததென்று குறிப்புரை தந்தருளினார்கள்.

முன்னும் பின்னும் ஸ்ரீ ராமலிங்க ஓதுவாரவர்களது தேவார மதுர பாராயணமாக உபந்நியாசமும் பிரஸாத விநியோகமும் முற்றுப்பெற்றது.

இனிவரும் மார்கழிமாதத்தில் 25உ புதவாரம் அவிட்ட நக்ஷத்திரம் ஆறுமுகநாவல சற்குருநாத சுவாமிகள் அவதரித்த "ஆறுமுகநாவல ஜயந்தி" மகாதின மாதலால் அன்று தில்லைவாழந்தணர்களுக்குச் சம்பாவனையும் மாகேசுரர்களுக்கு அன்னதான பூரிதானமாகிய குருபூசை உபந்நியாசமும் உமாபதி விலாசத்தில் செழிக்க நடந்தால் குருவருள் பெருகுமென்று ஸ்தலவாசிகள எதிர் பார்க்கிறார்கள்.

அதற்குப் பெரும்பொருள் வேண்டப்படுதலால் இலங்கை, இந்தியா, தவீபாந்தரங்களில் வசிக்கும் சைவாபிமானிகள் முன்னுடிய சிதம்பரம் உமாபதிவீதி ஸ்ரீ ஞானசம்பந்த விலாஸ ப்ரெஸ் பிர்ம்மஸ்ரீ ஸ்ரீராமசாஸ்திரிகளவர்களுக்குத் தங்கள்தங்களாலியன்ற பொருளை அனுப்புவார்களேயானால் அது அன்போடு ஏற்றுக்கொள்ளப்படும்.

உபகரித்தவர்கள் பெயரும் தொகையும் பத்திரிகையில் வெளிவரும்.

இங்ஙனம்,
பா. சிதம்பரநாதபிள்ளை,
உமாபதிவீதி, சிதம்பரம்.

### இந்துசாதனபத்திரிகாசிரியர் அவர்கட்கு.

ஐயா,

சென்ற மாதம் நான் என் விடுதலைநாட்களைச் செலவழிக்கும் நோக்கமாய் வவுனியாவிற் போய் நிற்கும்பொழுது அங்கு கோட்டில் ஓர் விசேஷ வழக்கு நடக்கு மென்பதை யறிந்து நானும் அவ்விடம் சென்றேன். வழக்கின் இரு பகுதியாரையும்கூப்பிட்டதின்பின் "இந்தவழக்கின் சாட்சிக்காரர் எல்லோரும் இத்திமரத்துக்குக் கீழே போங்கள்" என்று சேவகன் பெருஞ் சத்தமாய்ச்சொன்னான். இது எனக்கு சற்று யோசனையைக்கொடுத்தது.

இற்றைக்கு ஏறக்குறைய 50 வருஷங்களுக்குமுன் அங்கே கோடுகச்சேரியை ஸ்தாபித்து சில காலத்தால் கச்சேரியைஎடுத்தாலும்கோடு அக்காலம் துவக்கம் நடைபெற்று வருகின்றது. அந்தக்கோட்டில் அநேகம் பெரும்வழக்குகள் நடைபெறுகிறதும்உண்டு. இப்படியிருக்க அரசாட்சியார் இரண்டு சாட்சிக்கூடங்கள் கட்டுவிக்க எண்ணாமல் விளங்கப்படாத சாட்சிகளை இத்திமரத்துக்கும் விளங்கப்பட்டசாட்சிகளைக் கோட்டுக்கட்டடத்தின் மறு அந்தத்திலும் விடுவது எவருக்கும் விநோதமாயிருக்கும். சொல்லப்பட்ட இத்திமரம் கோட்டுவாசலின் வாயிலில் இருப்பதால் கோட்டில் நடக்கும் செய்திகளை அங்கு போய்வருபவர்களால் அறிந்து கொள்ளலாம். இன்னும், மழைக்காலத்தில் இத்தச்சாட்சிகளை எங்கே விடுவார்களோ தெரியவில்லை. இங்கே சாட்சிக்கூடங்கள் அவசியமில்லாவிட்டால் மறு இடங்களில் கட்டியிருக்கும் கூடங்கள் வீணுக்கென்றேசொல்லப்பட வேண்டும். அரசினர் இதைச்சற்றுச் சிந்தித்து இனிமேலாவது இரண்டுசாட்சிக் கூடங்கள் கட்ட எண்ணுவார்களென்று நம்புகிறேன்.

முல்லைத்தீவு
30-11-23

இங்ஙனம்
அ. ஆ. இ.

### கல்வியால் விளையும் நன்மையும் தீமையும்.

கல்வியினால் அறிவு வளர்ச்சி பெற்று, அந்தக் கல்விக்கேற்றவாறு அறிவு பிரிகின்றது. ஒன்று அறத்தை வளர்க்கின்றது; மற்றொன்று மறத்தை வளர்க்கின்றது. ஒவ்வொன்றும் முயற்சிக்குத் தக்கவாறு பிரசித்தி யடைகின்றது. நமக்குத் தேவை அறத்தை வளர்க்குங் கல்வியே. அக்கல்வி முற்காலத்தில் செழுமையுற்றிருந்தது; தற்காலம் தளர்ச்சி யடைகின்றது. மறத்தை வளர்க்குங் கல்வி தற்காலம் எங்கு பார்த்தாலும் காட்டுத்தீபோல் பரவிவருகிறது.

சகோதரர்களே! முற்காலக் கல்வியைச் சற்று சிந்திப்போம். அக்காலத்திய மாணவர்களின் லட்சியங்கள் பல. அதாவது பரதம், பண்டிதம், சோதிடம், விவசாயம், வியாபாரம் கைத்தொழில், சித்திரம், உத்தியோகம், கவியியற்றுதல், ஈஸ்வரனையடைதல் முதலானவைகளில் ஒன்றில் வல்லவனாகவேண்டுமென்பதே. இவை யாவும் பெரும்பாலும் தெரிந்தவர்களைப் பார்த்து, அவர்களிடம் சென்று, அவர்களுக்குத் தொண்டுபூண்டு உடல், பொருள், ஆவி மூன்றையும் அவர் பாத காணிக்கையாய் வைத்து அவரிடம் கல்விகற்று வருவா. உபாத்தியாயர் மாணவர்களைத் தன்குழந்தைகளாகவே பாவித்து ஒவ்வொருவரின் நிலை தெரிந்து அவர்களுக்குத்தக்க கல்வியையே போதித்தும் தன்குடும்பத்திற்கு ஏற்படும் செலவிற்குத் தக்கபடியே மாணவர்களிடமிருந்து பெற்று ஜீவித்தும் வருவர். பள்ளிக்கூடம் சிறு கூரைக்கட்டு திண்ணை, அல்லது மரத்தடியாகவே யிருக்கும்.

இனி மாணவர்களின் கடமை யாதெனஆராய்வோம். "வைகறைத் துயிலெழு" என்ற ஆன்றோரின் வாக்கின்படி சூரிய உதயத்திற்கு முன்னமே யெழுந்திருத்தல், கடவுளைத் துதிசெய்தல், பின்னர்ஸ்நானஞ்செய்து சூரியநமஸ்காரஞ் செய்தல், மதாசாரப்படி குறிகளிடுதல், பின்னர் தத்தம் பள்ளிக்குச் செல்லல். குருவின் கட்டளைப்படி பாடம் ஒப்பித்து மீட்டும் பாடங்களைஎழுதிக்கொடுக்க வாங்கி சந்தேகங்களை நிவர்த்திசெய்துகொண்டு காலை ஆறுநாழிகைக்கெல்லாம் அழகிய பாடல்களால் உபாத்தியாயரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு சாப்பாட்டிற்குச் செல்லுவார்கள். பெரும்பாலார் பெற்றோர்களாலும், குல குருவாலும், உபாத்தியாயராலும் சொல்லிக்கொடுத்த மந்திரங்களை ஜெபித்தும் இஷ்ட தெய்வங்களுக்குப் பூஜை செய்தும் சாப்பிடுவார்கள். மீட்டும் எட்டுநாழிகைக்கெல்லாம் பள்ளிக்கூடம் வந்து பழம்பாடம் படித்து, உபாத்தியாயரிட்ட கணக்குகளையெல்லாம் தீர்த்துத் தெரியாதவைகளை அவரிடங் கேட்டுத் தெரிந்துகொண்டு மத்தியானம் பதினேழு நாழிகைக்கெல்லாம் விடைபெற்றுச் சாப்பாட்டிற்குச் செல்வார்கள். வீட்டில் பெற்றோர்களிடம் சாப்பாட்டை உண்டு இருபது நாழிகைக்கெல்லாம் பள்ளி சேர்ந்து உபாத்தியாயரால் பகவத்கீதை, திருக்குறள், தேவாரம், திருவாசகம் முதலான நூல்களின் கருத்துகளை உபந்நியாசிக்கக் கேட்டுச் சிந்திப்பார்கள். இவர்களின் முக்கிய பாடங்கள் அரிச்சுவடி, கொன்றைவேந்தன், ஆத்திசூடி, வேழமுகம், உலகநீதிப் புராணம், எண்சுவடி வருஷப்பிறப்பு, மூதுரை, நல்வழி, நன்னெறி, விவேகசிந்தாமணி, திவாகரம், நிகண்டு இன்னும் ஈஸ்வரபக்தியைத் தரத்தக்க பாடங்களும் சேர்க்கப்படும். பின்னர்ச் சூரிய அஸ்தமனத்திற்கு "அந்திக்குப் போறோம் நாங்கள் அகத்தினில் விளையாடாமல், சுந்தரி விளக்கின் முன்னே சுவடிக ளவிழ்த்துப் பார்த்து, வந்தது வராததெல்லாம் வகையுடன் படித்துக்கட்டிக். கந்தனார் சேவல்கூவக் காலமே யெழுந்து வாறோம்" என்று விடைபெற்றுச் சென்று அப்படியே நடப்பார்கள். மாணவர்கள் உபாத்தியாயரைச் சுவாமி யென்றும் ஐயா வென்றும் அவரின் நிலைக்குத் தகுந்தபடி அழைப்பார்கள். எப்பொழுதும் ஒழுக்கத்துடனே நடப்பார்கள். சில சந்தர்ப்பங்களில் ஒழுக்கநடை தவறுவார்களாகில் பெற்றோர் உபாத்தியாயர் முதலானவர்கள் அப்போதைக்கப்போது இடித்துப் புத்திபுகட்ட நல்வழியில் திரும்புவார்கள். மாணவர்கள் பெற்றோர் முதலானவர்க்குக்கீழ்ப்படிந்தே நடப்பார்கள். இவர்கள் படித்துவெளிவரும் போது உபாத்தியாயரால் அநேக நீதி மார்க்கங்களைப் போதிக்கப் பெறுவார்கள். பொது ஜனங்கள் இவர்களை எப்பொழுதும் நன்குமதிக்கும்படி நடந்து கொள்வார்கள்.

சகோதரர்களே! இவர்கள் மலிந்த நாட்டில் தான் ஈஸ்வர பக்தி மிகுந்தது; சித்தரும் முத்தரும் பெருகினார்கள்; அறம் வளர்ந்தது; கைத்தொழில் பெருகிற்று; வியாபாரம் நிரம்பிற்று; சங்கீதம் பரவிற்று; சிற்பம் விரிந்தது; சித்திரம் சிறந்தது; கணிதம் உயர்ந்தது; பரதம் படர்ந்தது; பாக்கள் ஓங்கின; வீரம் செறிந்தது; சுதந்தரம் தோன்றிற்று; அன்பு திகழ்ந்தது; ஆத்மசக்தி ஒளி வீசியது; ஆயுதம் அடி பணிந்தது; ஆனந்தம் உண்டாயிற்று; உண்மை உலாவிற்று; கற்புகளித்தது; காவிகள் சிறப்புற்றன; காலன் கலங்கினன்; சாபம் பலித்தது; சத்தியம் நிலைநின்றது; அழகு சொரிந்தது; இலட்சுமி பொங்கினள்; சரஸ்வதி தாண்டவமாடினள்; பராசக்தி பண்புடன் வாழ்ந்தனள்; மந்திரி மலிந்தனர்; அரசர் நேர்வழிநின்றனர்; மாதமும்மாரி பொழிந்தது. விளைவுகுவிந்தது; எங்கும் மங்கள உண்டாயிற்று.

சகோதரர்களே! இக்காலக்கல்வியைச்சற்றுச் சிந்திப்போம். மாணவர்களின் லட்சியம் இரண்டே பெரும்பாலோர்க்கு உத்தியோகம்; சிறுபான்மையோர்க்கு வியாபாரம் பரதம், பண்டிதம், சோதிடம், சித்திரம் கவியியற்றுதல், ஈஸ்வரனை யடைதல் முதலான காரியங்களை யுடையவரை ஆதரிப்போரில்லாமையால் நாளுக்குநாள் அவர்களின் தொகை குறைந்து விட்டது. தற்சமயம் அதைத்தெரிந்து கொள்ள வேண்டுமென்று நினைப்பவரும்சொற்பம். அதைக்கற்றுக் கொடுப்பவர் கிடைப்பதும் அரிது. விவசாயம் கைத்தொழில் செய்கிறவர்கள் கல்வி அவசியமில்லையென்று தள்ளி விட்டார்கள் அதன் பலனாக விளைவு முன்னிருந்ததை விடக் குறைவாகி விட்டது. இக்காலத்தில் உபாத்தியாயர்கள் பொருள் செலவு செய்தோ சரீரப் பிரயாசைப்


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1892-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று வண்-கிழக்கில் அடைவுபிடிக்கும் கூ. கண. க. நா. சொ. சண்முகம்பிள்ளையிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி டி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| இல. | மா. | தி. | ரூ. | ஊரும் பெயரும் | நகைவிபரம். |
|---|---|---|---|---|---|
| 1922ஞு. | | | | | |
| 4358 | 6 | 17 | 10 | வண்கிழக்கு செ. கந்தசாமி | பொன் கல்மோதிரம் 1 |
| 4426 | 7 | 5 | 70 | திருநெல்வேலி ச. சுப்பிரமணியம் | பொன் கொலுசுக்காப்பு சோடி 1 |
| 4432 | ,, | 6 | 40 | நல்லூர் ச. சுப்பிரமணியம் | பொன் ஒரு கல்லில்லாத கைச்சங்கிலி 1 |
| 4500 | ,, | 20 | 10 | வண்-மேற்கு கா. பொன்னம்பலம் | பொன் ஒருபக்கம் குமிளில்லாத தாயித்து 1 |
| 4501 | ,, | 21 | 220 | வண்-மேற்கு சா. ஆ கணபதிப்பத்தர் | பொன்பிராஞ்சுக்காசு 4கோத்த தாலிக்கொடி 1, செட்டிக்காப்பு சோடி 1, கைச்சங்கிலி 1 |
| 4522 | ,, | 27 | 50 | கந்தர்மடம் ச. கனகசபை | பொன் பிராஞ்சுக்காசு 4-ம், தாயித்து 2, புலிநகம் 2, கோத்த அரைஞாண் 1 |
| 4589 | 8 | 10 | 65 | நவாலி க. தம்பிமுத்து | பொன் சங்கிலி 1 |
| 4631 | ,, | 23 | 150 | சுண்டிக்குளி மூ. நாகனுதி | பொன் பின்னல்வேலைசெய்த கொலுசுக்காப்பு சோடி 1 |
| 4673 | 9 | 1 | 12 | வண்-கிழக்கு ச. தம்பையா | பொன் தாயித்து 1 |
| 4687 | ,, | 3 | 40 | கந்தர்மடம் க. கார்த்திகேசு | பொன் முகப்பில்லாத கருசமணிக்கோர்வை 1, காதுப்பூ சோடி 1, கொப்பு சோடி 1, நாட்டுககடுக்கன் சோடி 2 |
| 4700 | ,, | 4 | 80 | கந்தர்மடம் வை. செல்லப்பா | பொன் கொலுசுக்காப்பு சோடி 1 |
| 4753 | ,, | 12 | 70 | வண்-மேற்கு கா. பொன்னம்பலம் | பொன் கொலுசுக்காப்பு சோடி 1 |
| 4776 | ,, | 15 | 40 | கந்தர்மடம் வே. நடராசா | பொன் அரைமுடி 1, சலங்கை 37 |
| 4837 | ,, | 23 | 190 | கலட்டி சி. முத்து | பொன் த. இ. பவுன் 2. மணி 2, கோத்த சங்கிலிக் கொடி 1 |
| 4924 | 10 | 7 | 60 | தட்டாதெரு சி. தாமோதரம்பிள்ளை | பொன் டைமன் க. வை. சங். 1 |
| 4925 | ,, | 7 | 65 | சரவணை செ. பரநிருபசிங்கம் | பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| 4973 | ,, | 14 | 60 | வண்-மேற்கு கா. பொன்னம்பலம் | பொன் கம்பிப்பூரான் அட்டியல் 1 |
| 4979 | ,, | ,, | 17 | ஆனைப்பந்தியடி ச. பொன்னுத்துரை | வெள்ளிப்பாதசரம் சோடி 1 |
| 5014 | ,, | 18 | 140 | சண்டிலிப்பாய் த கந்தையா | பொன் தாயித்துடன்சங்கிலி 1, அரைமுடியுடன் நூல்கட்டிய அரைஞாண் 1 |
| 5025 | ,, | ,, | 25 | ஆரியகுளத்தடி சி. சுப்பிரமணியம் | பொன் சிறு. பீலிக், காப். சோ. 1 |
| 5069 | ,, | 23 | 85 | வண்-கிழக்கு கா. கந்தசாமிப்பத்தர் | பொன் பட்டணக்காப்பு சோ. 1 குண்டுவைத்த தங்கப்பவுண் 2 |
| 5162 | 11 | 14 | 125 | நல்லூர் ஆ. சிவகுரு | பொன் சங்கிலிக்கொடி 1 |
| 5167 | ,, | 15 | 30 | ஆனைப்பந்தியடி ச. பொன்னுத்துரை | பொன் நசிந்த தாயித்து 1, அரும்புத்தடை 2, சாதா மோதிரம் 1 |
| 5195 | ,, | 18 | 170 | வண்-கிழக்கு மு, தாமோதரம்பிள்ளை | பொன் கம்பிப்பூராணட்டியய 1 சங்கிலி 1 |
| 5213 | ,, | 20 | 25 | அனலைதீவு ச. வைத்திலிங்கம் | பொன் கருசமணிக்கோர்வை 1 |

விற்பனவு:—ருத்ரோத்காரிவருடம் மார்கழிமீ 4உ (19-12-23) புதன்கிழமை காலை பத்துமணி தொடக்கம் எடுபட்ட நகை பிறீங்கலாக டி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்,

(Mis. 416).

பட்டோ, விஷயந் தெரியாது செட்டிருச் செய்தோ, அல்லது சகலமும் தெரிந்து கொண்டோ உபாத்திமைப் பரீட்சையில் தேறி நற்சாட்சிப் பத்திரம் பெற்றவர்களே. இவர்களில் பெரும்பாலோர் மேனாட்டு நாகரிகமென்னும் இருளில் மூழ்கியவர்களாகவே யிருப்பார்கள். நம்மை அடிமைகளாக்க ஆசையுடையாருக்கு இவர்கள் தான் அடிமைகளை உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள். இவர்களுக்கு வயிற்றிற்கும் காணாத சம்பளம் கொடுத்து ஆங்காங்கு செப்பனிட்டிருக்கும் தொழிற்சாலைகளில் அமர்த்தி வைத்திருப்பார்கள். அடிமைகள் உற்பத்தி செய்யும் இச்சாலைகளை இக்கால மாணவர்கள் பள்ளிகளென்று நினைத்து விளக்கில் விட்டிற்பூச்சிகள் விழுவதுபோல நாம் அடிமைகளாவோ மென்பதைய மறியாது பிரயாசைப்பட்டு அடைகிறார்கள். அங்கு தெய்வவாசனை யறியாத கல்விகளே போதிக்கப்படுகின்றன. இவர்களுக்குப் பார்லிமெண்டே தெய்வசபையாகவும், உத்தியோகங்களே மோக்ஷ வீடாகவும், மேனாடே கயிலாயமாகவும் மாறிவிடுகின்றன.

சகோதரர்களே! இனி இக்காலமாணவர்களின் நாகரிகத்தைப்பற்றிச் சற்றுச் சிந்திப்போம். காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்க குறைந்தது சூர்ய உதயமாகி ஐந்து நாழிகை யாகிறது. எழுந்ததும் படுக்கையிலேயே உட்கார்ந்து கொண்டு தன்னை ஈன்றெடுத்த தாயையோ அன்றி வேலையாட்களையோ பலகாரம் காப்பி முதலியன கொண்டுவரச் சொல்லிச் சாப்பிட்டுவிட்டுக் கண்ணாடி சீப்பு எண்ணெய் முதலிய வைகளைக் கொண்டு வரச் சொல்லி கிராப்போ அல்லது இன்னும் என்னென்னகோலமோ செய்து வைத்திருக்கும் தலையைச் சீவி கண்ணாடிபார்த்துத் திருப்தியடைந்த பிறகு வியர்வை நாற்ற மடித்த சட்டையணிந்து கொண்டு கழுத்துக்குச்சுருக்குமாட்டி காலில் பூட்ஸ் தரித்து சிலத்தில் படும்படி இடையில் வேஷ்டி கட்டிப் புறப்படும்போது பெற்றோர்கள், 'தம்பி! நெற்றி சூன்யமாயிருக்கின்றதே! நமது மதாசாரப்படி குறியிட்டுக் கொள்ளேன் என்றால், 'இன்னும் கர்நாடகத்தச் சனியன் தலைந்த பாடில்லையே' யென்று சொல்லிவிட்டுப் போய் விடுவாரும் உண்டு. இடைவழியில் காப்பிக்கடைகளைக் கண்டால் அங்கும் கடன் சொல்லிச் சாப்பிடுவர். இவர் பள்ளிக் கூடம் சென்றதும் அங்கு இவர்களுக்குத் தோற்றுவனவெல்லாம் தமோகுணப் பிரவர்த்திகளாகையால் இவர்களும் தமோ குணத்திலாழ்ந்து விடுகிறார்கள். பின்னும் கேவலம் புல்லறிவுடைய ஒரு கீழ்த்தர அதிகாரியைக்கண்டால் பயந்து மரியாதை செய்வர். ஆனால் தனது தாய், தந்தை, உபாத்தியாயர் முதலானவர்களை அலட்சியஞ்செய்துவிடுவர். பீடி, சிகரெட் முதலிய லாகிரி வஸ்துக்களை இவர்கள் ஜேபியில் எந்த நிமிஷமும் பார்க்கலாம். இன்னுஞ் சிலர் தங்கள் குடும்பத்தில் எந்த விதமாகவாவது ரூபாயைக்கைப்பற்றிக் கொண்டு லாகிரிக்கடை விலைமாதர்வீடு நாடகக் கொட்டகை பயஸ்கோப் முதலிய விஷயங்களில் செலவிடுவர். இந்நாகரிகப்பேயின் வாயிலிருந்து சில மாணவர்களே தப்பமுடியும்.

சகோதரர்களே! இனி இவர்கள் கல்வியின் முடிவைப்பற்றிச் சிந்திப்போம். சிலர் படித்துக் கொண்டு போம்போதே மலைத்து நின்று விடுவதும் உண்டு. மண்ணெண்ணெய் விளக்கின்முன்படித்துக் கண்ணையிழந்து விடுவாருமுண்டு. சிலர் சித்தப்பிரமை யடைவதுமுண்டு. சிலர் வறியவராகி நின்றுவிடுவதுமுண்டு. இவர்கள் ஒவ்வொருவரும் ஒருதொழிலுக்கும் லாயக்கற்றவர்களாகிச் சிலர் வர்த்தகக் குமஸ்தாக்களாகவும் வருகின்றனர். சிலர் மனிதர்களை மிரட்டியே ஜீவனம் செய்கின்றார்கள். மற்றுஞ்சிலர் காப்பிக்கடைகளில் பலகாரம் பரிமாறக்கூடத் தேவையில்லாதவர்களாயிருக்கிறார்கள். சிலர்மாத்திரம் எக்கஷ்டம் வந்தாலும் சர்க்கார் எவ்வளவுதூரம் பரீக்ஷையின் கஷ்டத்தை உயர்த்திக்கொண்டு போனாலும் முயற்சியை விடாது பரீக்ஷையில் தேறுகிறார்கள். அப்படித்தேர்ந்தவர்களிலும் நூற்றுக்கு வெகுசிலரே உத்தியோகத்திலமர்ந்து பெரும்பாலோர் அடாது செய்கின்றனர். சிலர் வக்கீல்பரீக்ஷையில் தேறிப் பணச் செலவால்வறியோராகி நகரங்களிலமர்ந்து தம் வீட்டின் முன்னால் விலாசப்பலகைகள் எழுதிக்கட்டிக் காசினியோருக்குக் கற்பனையைப் புகட்டிப் பணஞ் சம்பாதிக்கின்றார்கள். இன்னும் அநேகர் இருந்த ஆஸ்தியெல்லாம் செலவு செய்து படித்துவிட்டு உத்தியோகமும் கிடைக்காமல் பெற்றோர்களுடன் தெருவில் நின்று திண்டாடுகிறார்கள். அந்தோ! பரிதாபம்!! இவர்களின் கதி பரிதாபிக்கத்தக்கது!!!

சகோதரர்களே! என்னே கல்வியின் கொடுமை! இவர்கள் மலிந்த நாட்டில் தான் கள்ளப் பத்திரம், பொய்ச்சாட்சி, கொலை, களவு, கள், காமம், சூது, பொறாமை, வஞ்சம், நோய், பஞ்சம், இக்கால நாகரீகமென்னும் பிசாசு முதலிய தீங்கினங்கள் பெருகின. —நவசக்தி.

[வேதனம் ஒன்றைமாத்திரம் விரும்பிக் கல்விகற்பிக்கும்ஆசிரியர்களும், ஆசிரியரை ஐங்குரவருள் ஒருவராக மதியாத மாணவர்களும் இவ்விஷயத்தை நன்குணர்ந்தொழுகுவார்களாயின் எங்களுக்கும் எங்கள் தேசத்துக்கும் ஈடேற்றமுண்டு.
—பத்திராசிரியர்].


## "நவ சக்தி"

வார மும்முறைப் பதிப்பு.

சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருட சந்தா ... | ரூபா 15 | 0 |
| ஆறுமாத சந்தா ... | ,, 7 | 8 |
| மூன்றுமாத சந்தா ... | ,, 4 | 0 |
| மாத சந்தா ... | ,, 1 | 8 |

சிங்கப்பூர் பினாங்முதலிய வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூபா 20.

விளம்பர விகிதம்.

மும்முறைப் பதிப்பு.

| | | |
|---|---|---|
| கலம் 1-க்கு நாள் ஒன்றுக்கு | 8 | 0 |
| சில்லறை விளம்பரம் அங்குலம் 1-க்கு | 0 | 10 |

வாரப் பதிப்பு.

| | | |
|---|---|---|
| கலம் 1-க்கு வாரம் 1-க்கு | 7 | 0 |
| சில்லறை விளம்பரம் அங்குலம் 1-க்கு | 0 | 8 |

நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் நேரே எங்கட்கு எழுதவும்.

மானேஜர் "நவசக்தி",
இராயப்பேட்டை, சென்னை.

## "லோகோபகாரி",

28-வருஷகாலமாக இது தமிழுலகமெங்கும் உலவி வருகிறது. இதில் வேதாந்த விஷயங்களும் எளிய தமிழில் எழுதப்படும் சமாசாரங்களும் இனிய பாடல்களும் சித்திரபடங்களும் வெளிவரும். உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி இப்பத்திரிகை எவருக்கும் அச்சமின்றி, உண்மையைக் கடைப்பிடித்து கண்டிக்கையான அபிப்பிராயங்களை வெளியிட்டுவரும். நாட்டிலே புத்துயிர் ஏற்பட்டு இந்தியர் சுயராஜ்ய பதவி யடைந்து ஞாலமெல்லாம் இன்பம் அடைய வேண்டு மென்பதே "லோகோபகாரி" யின் முக்கிய நோக்கம் ஸ்ரீமாந். பரலி. சு. நெல்லையப்பபிள்ளை அவர்கள் இதன் ஆசிரியராக இருக்கின்றார். தமிழறிந்த ஒவ்வொருவரும் இதனை ஆதரிக்கவேண்டும். வருஷ சந்தா ரூபா நான்கே. வெளிநாட்டிற்கு ரூபா ஆறு, மாதிரிப்பிரதி இனாம்,

காரியஸ்தர், "லோகோபகாரி"
கோமளேஸ்வரன் பேட்டை, சென்னை.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1892-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று வண்-கிழக்கில் அடைவுபிடிக்கும் கா. ப. தியாகராஜக்குருக்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி டி சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| இல. | திக. | ரூ. | ச. | ஊரும், பெயரும். | நகைவிபரம். |
|---|---|---|---|---|---|
| 1922 ஞூ ஆனி மீ | | | | | |
| 1094 | 30 | 20 | 20 | மா. மாரிமுத்து கொக்குவில் | பூ 2 |
| ஆடி | | | | | |
| 1138 | 11 | 13 | | அ. முத்துத்தம்பி கொக்குவில் | மூன்றுகல்லுவைத்த மோதிரம் 1 |
| 1227 | 31 | 10 | | இ. கந்தையா திருநெல்வேலி | சிவப்புக் காதோலை சோடி 1 |
| ஆவணி | | | | | |
| 31 | 12 | 42 | 60 | க. அப்பாக்குட்டி வண்கிழக்கு | சுரைக்காப்பு சோடி 1 |
| 32 | 12 | 11 | | ச. செல்லையா கொக்குவில் | கல்லுமோதிரம் 1 |
| 64 | 19 | 15 | | த. சங்கரப்பிள்ளை கொக்குவில் | கல்லுமோதிரம் 2 |
| 65 | 19 | 25 | | ,, | தாலி 1 பூ 1 |
| 71 | 22 | 10 | | தி. முருகேசு சுதுமலை | மோதிரம் 1 |
| 81 | 25 | 10 | | ஆ விசுவலிங்கம் வண்மேற்கு | கொலிசு ஒற்றை 1 |
| 85 | 26 | 10 | 73 | த. சங்கரப்பிள்ளை கொக்குவில் | வெள்ளிச் சங்கிலி சோடி 1 |
| 114 | 29 | 13 | | க. நாகனுதர் கொக்குவில் | மோதிரம் 4; சிமிக்கிவாளி சோடி 1 |
| புரட்டாதி | | | | | |
| 187 | 16 | 50 | | சி. தம்பாபிள்ளை தாவடி | ஒப்பின் காதோலை சோடி 1 |
| ஐப்பசி | | | | | |
| 219 | 4 | 20 | | வே சின்னப்பா கொக்குவில் | சம்பிப்பூரான் சறடு 1 |
| 297 | 22 | 25 | | வ. தம்பையா சங்குவேலி | ஒப்பின் காதோலை சோடி 1 |
| 326 | 29 | 42 | 50 | த. கந்தையா வண்மேற்கு | ஒப்பின் காதோலை சோடி 1 |
| கார்த்திகை | | | | | |
| 339 | 1 | 8 | | அ. செல்லத்துரை கோண்டாவில் | வெள்ளிச்சங்கிலி சோடி 1 |
| 352 | 3 | 15 | | வ சிதம்பரனுதர் வண்கிழக்கு | பச்சைவைத்த மோதிரம் 1 |
| 370 | 7 | 9 | 04 | ஆ. சுப்பையா கலட்டி | கூடு 1 |
| 372 | 8 | 7 | 04 | ச. சுப்பிரமணியம் வண்மேற்கு | வெள்ளிச் சங்கிலிக் கொடி 1 |
| 415 | 14 | 60 | | கா. தம்பு வண் கிழக்கு | பட்டணக்காப்பு சோடி 1 |
| 453 | 20 | 50 | | நா. விசுவலிங்கம் வண் கிழக்கு | ஆணிபோட்ட பட்டணக்காப்பு சோ.1 |

விற்பனவு:—ருத்ரோற்காரி வருடம் கார்த்திகை மீ 30உ (15-12-23) சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் எடுபட்ட நகைபிறக்கலாக மிகுதி டியாருடைய வீட்டில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 414).

[ESTABLISHED 1909].

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
### Kairul Muslimeen Medical Hall
### PORTONOVO (*SouthArcotDistrict*).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லாஇன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்ற விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீரெரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காகவே இதனை மிகவும் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்சிலவு இனும். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டியூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது டிகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனாமும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது மேல் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

Y. 19).

## "பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர்ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்றுகூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

யாழ்ப்பாணம்

சைவபரிபாலனசபையாராற் பிரசுரஞ் செய்யப்பெற்ற

## புத்தக விளம்பரம்.

| | ரூ. ச. |
|---|---|
| முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது) | ௧௦ |
| இரண்டாம் பாலபாடம் ,, | ௧௫ |
| மூன்றும் பாலபாடம் ,, | ௨௦ |
| நான்காம் பாலபாடம் ... ... | ௩௦ |
| ஐந்தாம் பாலபாடம் ... .... .... | ௪௦ |
| ஆறும் பாலபாடம் .... ... ... | ௬௦ |
| கலாமஞ்சரி எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல் லீவிங் சேர்ட்டிவிற்கற்"வகுப்பிலும் பயிலும்மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும்வண்ணம் இயற்றப்பெற்றுள்ளது. விளக்கத்துடன் | ௭௫ |
| கலாமஞ்சரிவிளக்கம்(மாத்திரம்) | ௩௦ |
| கிருட்டிணன்தூது, உரையுடன் | ௮௫ |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ௩ |
| ஆத்திசூடி ... ... ... | ௩ |
| வெற்றிவேற்கையுரை ... ... | ௩ |
| வாக்குண்டாமுரை ... ... ... | ௩ |
| நல்வழியுரை .... ... ... ... | ௩ |
| நன்னெறியுரை ... .... ... ... | ௩ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கிள மொழிபெயர்ப்புடன்)... ... ... | ௧௨ |
| இலக்கண வினவிடை... ... ... | ௧௦ |
| நிகண்டு ௧௧-வதும் ௧௨-வதும் ... | ௨௫ |
| திருவாதவூரடிகள்புராண மூலம் ... | ௨௫ |
| திருச்செந்தூர்ப்புராணவுரை | |
| கிளேஸ்காகிதம் ... ... ... | ௧-௨௫ |
| றவ்காகிதம்... ... ... ... | ௧-௦௦ |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | ௧௦ |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ௩ |
| பிள்ளையார்கதை ... ... ... ... | ௧௨ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | ௧௨ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | ௧௦ |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ... ... ... ... ... | ௧௦ |
| சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) | ௬ |
| குமணசரித்திரம் ,, | ௬ |
| பஞ்சரத்தினத் திருப்புகழ் ... .... | ௩ |
| சோமவாரவிரதமான்மியம்... .... | ௧௦ |
| கந்தவிரதமான்மியம் .... .... .... | ௧௦ |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது ஏட்டுப்பிரதியின்படி அச்சிடப்பெற்றது... ... ... ... ... | ௧௫ |
| மறைசையந்தாதி ... ... ... | ௨௦ |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்

சபையாராலச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், M. S. துரை, பிறிற்றனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தகசாலை முதலிய இடங்களிலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப்பிள்ளையுடைய கடையிலும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை,


வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.